(ஆ) கோரிக்கை எண். 8—தேர்தல்கள்

திருவாளர்கள் எச். எம். ராஜு. கோ. விரையன், எஸ். டி. உகம்சந்த் ஆகியவர்களுடைய வெட்டுத்தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,53,27,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன் வடிவு, 1990 (ஆ, இ).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறி விப்பு. 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 3), சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசை வினைத் தெரிவித்து உள்ளார்கள்.

6. சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்) தொடர்ச்சி.

(ஆ) நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண். 3) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.